# சீர்காழி நகராட்சி



2019–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11.01.2019 வெள்ளி கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரகூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

| | |
|---|---|
| பொருள் எண்-1 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் நிர்வாக அனுமதியின் படி சீர்காழி நகராட்சி வார்டு எண்-21 சாய்பாபா கார்டனில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம்–2018–19 ன் கீழ் நுண்உரம் செயலாக்க மையம் (Micro Compost Centre) ரூ.76.00 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண்–222 நாள்–18.06.2018 ன் படி அனுமதிவழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள ஆயத்த பணிகள் மேற்கொள்ளும் போது அப்பகுதி பொது மக்களால் 20.12.2018 அன்று சாய்பாபா கார்டனில் நுண்உரம் செயலாக்க மையம் (Micro Compost Centre) அமைக்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக அந்த இடத்தில் பணி மேற்கொள்ள இயலாத சுழ்நிலையினை தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் அறிவுரையின்படி சீர்காழி வட்டாச்சியர் அவர்கள் முன்னிலையில் அமைதி பேச்சுவார்தை கூட்டம் 22.12.2018 அன்று நடத்தப்பட்டதில் சாய்பாபா கார்டனுக்கு பதிலாக மாற்று இடம் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டதின்படி தென்பாதி வார்டு எண்–20 ல் உள்ள நகர அளவை எண்–29/1,29/2, வார்டு–B, பிளாக்–13 ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மயானத்தில் நுண்உரம் செயலாக்க மையத்தினை இடமாற்றம் செய்வதற்கு முடிவுசெய்யப்பட்டு 27.12.2018 அன்று மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்கள் மாற்று இடத்தினை பார்வையிட்டு மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள அறிவுரை வழங்கியதின் பெயரில் தென்பாதி மயானத்தில் அதே ஒப்பந்தவிலையில் அதே ஒப்பந்ததாரா் மூலம் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் பின் இனற்ப்பு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**( ந.க.எண். 1190/2018/இ1 )** |
| பொருள் எண்-2 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் 07.01.2019 அன்று நடத்தப்பட்ட Fecal Sludge and Septage Management (FSSM) ஆய்வு கூட்டத்தில், சீர்காழி நகராட்சியில் 20 KLD கொள்ளளவுக் கொண்ட Fecal Sludge Treatment Plant (FSTP) அமைத்திட தெரிவிக்கப்பட்டதின் பெயரில் சீர்காழி நகர அளவை வார்டு-A, பிளாக்-7, நகர அளவை எண்-16/6, சீர்காழி நகராட்சி வார்டு எண்-4 ஈசானியத் தெருவில் அமைந்துள்ள Compost Yard ன் வடக்கு பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, மேற்படி பணிக்காக தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.260.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கிடுமாறும், இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு இப்பணிக்கான மதிப்பீட்டுத் தொகையினை முழு மானியமாக வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு விரிவான திட்ட பிரேரனை அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.<br>**( ந.க.எண். 1/2019/இ1 )** |

| | |
|---|---|
| பொருள் எண்-3 | சீர்காழி நகராட்சி – வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டம் - 2018–19 ன் கீழ் சீர்காழி நகராட்சி பகுதியில் சொத்துவரி விதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் 20.12.2018 அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.64,663/– மற்றும் Expression of Interest (EOI) Water ATM 2018-19 ன் கீழ் அமைக்கும் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் 10.01.2019 அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.71,820/– வரப்பெற்றுள்ளது. ஆக கூடுதல் ரூ.1,36,483/- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்களுக்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்-8200/2016/இ1)** |
| பொருள் எண்-4 | இந்நகர பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தான திருக்கோவிலின் திருமுல்லைப்பால் உற்சவத்திற்கு ஒவ்வொரு ஆண்டை போல் இந்த ஆண்டும் 11.04.2019 அன்று திருவிழா தொடங்கயுள்ளதால் 11.04.2019 முதல் 21.04.2019 வரையிலான திருவிழா காலங்களுக்கு வடக்கு கோபுர வாசலின் முன்புறம் சாலையில் நடவனபந்தல் மற்றும் குழல் விளக்கால் தினசரி வாடகை அடிப்படையில் அமைக்கும் பணி மேற்கொள்ள அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.75,000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-5 | இந்நகராட்சியின் 2016-17 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை வருவாய் நிதி, கல்வி நிதி மற்றும் குடிநீர் கட்டணத்திற்கான கணக்குகள் ஓய்வு பெற்ற முதன்மை கணக்காயர் ஒருவர் மூலம் கணக்குகள் தயார் செய்ததற்கும் நாகப்பட்டினம் உள்ளாட்சி நிதி தணிக்கைதுறைக்கு கணக்குகள் அனுப்பியதற்கும் ஒரு வருடத்திற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/- ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்-5002/2013/பி1) |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்-6 இரணியன் நகர், வார்டு எண்-21 வீரம்மாள் நகர் மற்றும் வார்டு எண்-24 ரயில்வே ரோடு ஆகிய மூன்று இடங்களில் சுச்சுபாக்ஸ் பெறுத்தும் பொது மக்களின் நலன் கருதி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.8500 நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சி 2018–19 ஆம் ஆண்டிற்கான நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் வரி விதிப்பாளரிடம் உடனடியாக வரி செலுத்த வலியுறுத்தி ஆட்டோ மூலமாக ஒலிபெருக்கி விளம்பரம் செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ. 1,00000/– க்கு மன்றத்தின் அனுமதியும், விலைப்புள்ளி கோரி மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவுகளை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-8 | சீர்காழி நகராட்சியில் 2018-19 ஆம் ஆண்டிற்கான நகராட்சிக்கு சொந்தமான புதிய மற்றும் பழைய பேருந்துநிலையம், அலுவலக கட்டிடம் மற்றும் இதர கட்டிடங்களுக்கான பழுதடைந்த மின் உபகரனங்களை பராமரிப்பு செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |

(ஓம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–11.01.2019

ஆணையர்,எ
சீர்காழி நகராட்சி.